Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, MAY 18, 2023

வியாழக்கிழமை மே 18, 2023 | ஒளி: 08 கதிர்: 273 | பக்கம்:06 | வடக்கு,கிழக்கு | FREE

## குருட்டுத் தன்மை 70ஆக உயர்வு




■ ரஞ்சித் ராஜபக்ஷ

நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட கண் சத்திரசிகிச்சையின் பின்னர் குருட்டுத் தன்மைக்கு உள்ளாகியவர்களின் எண்ணிக்கை 70 ஆகும் என்று சர்வ மதத்தலைவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தொடர்ச்சி P2

## புதிய ஆளுநர்கள் மூவர் பதவியேற்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் மூன்று புதிய ஆளுநர்கள், ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து புதன்கிழமை (17) முற்பகல் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

இதன்படி, வடக்கு மாகாண ஆளுநராக திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ், கிழக்கு மாகாண ஆளுநராக செந்தில் தொண்டமான், வடமேல் மாகாண ஆளுநராக லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன ஆகியோர் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

தொடர்ச்சி P2

## இணைந்து செயற்பட இணக்கம்

■ க.விஜயரெத்தினம்




கிழக்கு மாகாணத்தில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில், எதிர்காலத்தில் தீர்க்கமான முடிவுகளை எட்டுவதற்கும், இருவரும் இணைந்து செயற்படுவதற்கும் புதிதாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுடன் இணக்கம் காணப்பட்டதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

புதிய ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு ரவூப் ஹக்கீம் தொலைபேசி மூலம் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துவிட்டு, ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## வரலாற்று சிறப்புமிகு நிகழ்வு



தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு ஒரே தடவையில் தமிழ் ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளமையானது வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வாகும் என்றும் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சிறந்த சமிக்ஞையையும் இதன்மூலம் ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ளார் என்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ‘நம்பிக்கை பிறந்துள்ளது’



பிராந்திய நலன்களிலும், பிரதிநிதித்துவம் செய்யும் மக்களின் நோக்கங்களிலும் இணைந்து செயற்படுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் புதிய ஆளுநர்களை வாழ்த்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

“வடக்கு, கிழக்கு மாகாணங்களின் புதிய ஆளுநர்களான திருமதி. பி.எஸ்.எம்.சார்ள்ஸ் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் ஆகியோர் சிறுபான்மை சமூகங்களின் பூர்வீகத்திலுள்ளவர்கள்.

தொடர்ச்சி P2




## ஒரு ஜோடியில் ஒன்றை கழற்றிக்கொண்டு ஓட்டம்

சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள், 12 வயது சிறுவனின் ஒரு பாதணியை மட்டும் பலவந்தமாக கழற்றி கொண்டு சென்றுள்ளமை தொடர்பில் அச்சிறுவனின் தந்தை முறைப்பாடு செய்துள்ளார் என்று அங்குருவத்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மில்லகஸ்பொல பிரதேசத்தில் வசிக்கும் குறித்த மாணவன் செவ்வாய்க்கிழமை (16) காலை 7 மணியளவில் தனது வீட்டிலிருந்து பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தார்.

தொடர்ச்சி P2

### சுகாதார பரிந்துரைகளை

## கட்டாயம் பின்பற்றவும்


### பொது மக்களுக்கு எச்சரிக்கை

கொரோனா வைரஸ் உட்பட பல்வேறு வகையான வைரஸ்கள் பரவுவதைத் தடுக்க, முன்னர் அறிவிக்கப்பட்ட சுகாதார பரிந்துரைகளை மக்கள் பின்பற்றுவது கட்டாயமாகும் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம், புதன்கிழமை (17) எச்சரித்துள்ளது.

முகக்கவசங்களை அணிவது, கைகளை அடிக்கடி கழுவுதல், சன நெரில் மிக்க கூட்டங்களைத் தவிர்ப்பது போன்ற கொரோனா சுகாதார பரிந்துரைகளைப் பின்பற்றும்போது மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

கணிசமான கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் பதிவாவதுடன் கொரோனா மரணங்ளும் பதிவாகி வருகின்ற நிலையிலேயே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய வைரஸ் பரவல் தொற்றுநோய் நிலைமையை ஏற்படுத்தி, கொத்தணிகளை ஏற்படுத்துமா என்பதை தீர்மானிக்கும் அடிப்படை நடைமுறைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.



## சரணடைந்த ஆனோல்ட் பிணையில் விடுவிப்பு

■ நிதர்ஷன் வினோத்



இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண தொகுதி கிளைக் கூட்டத்துக்கு பின்னர் ஏற்பட்ட மோதல் குறித்து கைது செய்யப்பட்ட யாழ். மாநகர சபை முன்னாள் மேயர் இமானுவேல் ஆனோல்ட் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன், அவருக்கு எதிரான வழக்கு எதிர்வரும் ஜூலை 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் புதன்கிழமை (17) காலை தனது சட்டத்தரணியுடன் சரணடைந்த இமானுவேல் ஆனோல்டை பொலிஸார் கைது செய்தனர்.

தொடர்ச்சி P2

## போதகர் ஜெரோம் வந்ததும் கைதாவார்

### வராவிட்டால் இன்டர்போல் மூலம் நடவடிக்கை

மதங்களுக்கு இடையில் சர்ச்சையான கருத்துகளை தெரிவித்திருந்த போதகர் ஜெரோம் பெர்னாண்டோ நாடு திரும்பியதும் விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்படுவார் என்றும் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் இன்டர்போல் ஊடாக அவரைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ, புதன்கிழமை (17) தெரிவித்தார்.

அவருக்கு எதிராக நீதிமன்றத்தால் பயணத்தடை விதித்துள்ள நிலையில், அவரை கைது செய்வதற்கு எந்தத் தடையும் இல்லை என்றும் குறித்த விசாரணைகளுக்கு, எவ்வித இடையூறும் ஏற்படவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2



### சிறுநீரக சத்திரசிகிச்சை விவகாரம்

## இடைக்கால உத்தரவுக்கு சட்டமா அதிபர் எதிர்ப்பு

சிறுநீரக சத்திரசிகிச்சைகளை மேற்கொள்வதற்காக தமக்கு வழங்கப்பட்ட அனுமதியை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு சுகாதார அமைச்சு எடுத்த தீர்மானத்தை இடைநிறுத்தி இடைக்கால உத்தரவு பிறப்பிக்குமாறு பொரளையிலுள்ள தனியார் வைத்தியசாலை விடுத்த கோரிக்கையை எதிர்ப்பதாக சட்டமா அதிபர், மேன்முறையீட்டு நீதிமன்றில், புதன்கிழமை (17) அறிவித்தார்.

தொடர்ச்சி P2

## மஹிந்த உட்பட நால்வரின் பயணத்தடை முற்றாக நீக்கம்



2022ஆம் ஆண்டு மே 9ஆம் திகதியன்று நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட நால்வருக்கு விதிக்கப்பட்ட பயணத்தடையை முற்றாக நீக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்ற நீதவான் திலின கமகே, புதன்கிழமை (17) கட்டளையிட்டார்.

அன்றைய தினத்தில் அலரிமாளிகை மற்றும் காலி முகத்திடலில் நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பில், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ உட்பட 17 பேருக்கு வெளிநாட்டு பயணத்தடை விதிக்கப்பட்டது.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர்களான பவித்ரா வன்னியாராச்சி, ரோஹித அபேகுணவர்தன மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் காஞ்சன ஜயரத்ன ஆகியோர் சந்தேகநபர்களாக பெயரிடப்படாததால், அவர்களின் பயணத்தடையை நீக்குமாறு ஜனாதிபதி சட்டத்தரணி சவேந்திர பெர்னாண்டோ விடுத்த கோரிக்கையை பரிசீலித்த நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

தொடர்ச்சி P2

### கோட்டா மீது தற்கொலை தாக்குதல்

## 17 வருடங்களின் பின் ஆரூரன் விடுதலை

அப்போதைய பாதுகாப்பு செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவின் வாகன தொடரணி மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தி, அவரை படுகொலைச் செய்வதற்கு சூழ்ச்சிகளை செய்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் 17 வருடங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நபரை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க, செவ்வாய்க்கிழமை (16) விடுதலை செய்தார்.



தொடர்ச்சி P2

### வெடுக்குநாறிமலை ஆலயத்தில்

## எளிய முறையில் வழிபாடு செய்யுங்கள்

■ க. அகரன்



வெடுக்குநாறிமலை ஆலயத்தில் தொல்பொருட்களை சேதமாக்காவண்ணம் எளியமுறையில் வழிபாடுகளை மேற்கொள்ளுமாறு வவுனியா நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததுடன், விக்கிரகங்கள் உடைப்புடன் தொடர்புடையவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸாருக்கு பணித்துள்ளது.

வெடுக்குநாறிமலையில் சிலைகள் உடைக்கப்பட்ட விடயம் தொடர்பான வழக்கு வவுனியா நீதிமன்றில் புதன்கிழமை (17) எடுத்துகொள்ளப்பட்ட நிலையில்,

தொடர்ச்சி P2

## சிறுமி மரணம் குறித்து சிறையில் விசாரணை

களுத்துறை நகரிலுள்ள ஐந்து மாடிகளைக் கொண்ட ஹோட்டலில், மூன்றாவது மாடியில் இருந்து நிர்வாணமாக விழுந்து 16 வயதான சிறுமி மரணமடைந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட சந்தேகநபர்கள் நால்வரிடமும் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள், களுத்துறை சிறைச்சாலைக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளனர் என அறியமுடிகின்றது.

இதற்கான விசேட அனுமதியை, களுத்துறை நீதவான் ஹேமாலி ஹால்பந்தெனிய வழங்கியுள்ளார் என்று குற்றப்புலனாய்வு திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# புதிய ஆளுநர்கள் மூவர் பதவியேற்பு

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் கலந்துகொண்டார்.

வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத், வட மேல் மாகாண ஆளுநர் அட்மிரல் ஒப் த ப்ளீட் வசந்த கரன்னாகொட ஆகியோர் திங்கட்கிழமை (15) பதவி நீக்கம் செய்யப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியொருவர் பதவி விலகிய பின்னர், ஆளுநர்கள் பதவி விலகுவது சம்பிரதாயபூர்வமானது என்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியிலிருந்து விலகி, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டு பல மாதங்கள் கடந்துள்ள போதிலும் இந்த ஆளுநர்கள் பதவி விலகவில்லை என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

அதுமட்டுமின்றி, சில ஆளுநர்களை பதவியிலிருந்து நீக்குமாறு சம்பந்தப்பட்ட மாகாணங்களின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வந்துள்ள நிலையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## இணைந்து செயற்பட இணக்கம்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் எதிர்காலத்தில் தீர்க்கமான முடிவுகளை எட்டுவதற்கும், இருவரும் இணைந்து செயற்படுவதற்கும் இணக்கம் காணப்பட்டது. அத்துடன், கிழக்கு மாகாணத்திலுள்ள கட்சி பிரதிநிதிகள் சகிதம் விரைவில் ஆளுநருடன் சந்திப்பொன்றை மேற்கொள்ளவுள்ளதாகவும் ரவூப் ஹக்கீம் இதன்போது தெரிவித்தார்.

## வரலாற்று சிறப்புமிகு நிகழ்வு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மூன்று ஆளுநர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துள்ள அமைச்சர் ஜீவன் தொண்டமான், இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:

“தமிழ் பேசும் மக்கள் செறிந்துவாழும் பகுதிகளுக்கு தமிழ் ஆளுநர்களை நியமிக்குமாறு தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் கோரிக்கைகளை முன்வைத்து வந்தனர். மக்களின் கோரிக்கையும் அதுவாகவே இருந்தது. அந்தக் கோரிக்கையை ஜனாதிபதி நிறைவேற்றியமை வரவேற்கதக்கது.

“வடக்கு மாகாணத்தில் தமிழ் ஆளுநர்கள் பதவி வகித்தபோதும் கிழக்கு மண்ணுக்கு முதன்முறையாக தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டமையும் மகிழ்ச்சி. அதுவும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் அந்தப் பதவிக்கு வந்திருப்பது எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாக அமைந்துள்ளது.

“நாட்டில் மாகாண சபைகளில் தற்போது மக்கள் பிரதிநிதிகள் இல்லை. எனவே, நிர்வாகம் என்பது ஆளுநர் வசமும், பிரதம செயலாளர்கள் வசமும்தான் உள்ளன. எனவே, கிழக்கு மாகாணத்தில் சிறந்த சேவையை புதிய ஆளுநர் வழங்குவார் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. அவர் மூலம் சிறந்த சேவையை பெற்றுக்கொள்ளுமாறு மக்களிடமும் கேட்டுக்கொள்கின்றேன்.

செந்தில் தொண்டமான் மாகாண சபை உறுப்பினராக, அமைச்சராக, பதில் முதலமைச்சராக பதவி வகித்துள்ளார். ஆக மத்திய அரசுக்கும், மாகாண அரசுக்கும் இடையில் ஏற்படும் நெருக்கடிகளை எப்படி சமாளிப்பது என்பது அவருக்கு நன்கு தெரியும். ஆகவே, சிறப்பான சேவைகள் இடம்பெறும் என்ற நம்பிக்கை உள்ளது” என்றார்.

## ‘நம்பிக்கை பிறந்துள்ளது’

இதனால், எமது மக்களின் அபிலாஷைகள் பற்றி புதிதாக இவர்களுக்கு எதையும் சொல்ல வேண்டியதும் இல்லை.

வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் அன்றாட மற்றும் அடிப்படை பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய வேண்டிய தேவை உள்ளது. இவற்றில், போரின் வடுக்களால் ஏற்பட்ட தேவைகளுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும். இடப்பெயர்வு, மீள்குடியமர்தல், காணிகளின் உரித்துகளைப் பெறுதல், வாக்குரிமை மற்றும் சுயதொழில் ஊக்குவிப்பு ஆகிய திட்டங்களில் ஆளுநர்களுடன் இணைந்து செயற்படலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது” எனவும் அவர் தெரிவித்துள்ளார்

# ஒரு ஜோடியில் ஒன்றை கழற்றிக்கொண்டு ஓட்டம்

அப்போது அம்மாணவனை பின்தொடர்ந்து சைக்கிளில் வந்த இனந்தெரியாத சிலர் வலுக்கட்டாயமாகப் பிடித்து ஒரு காலில் இருந்த சப்பாத்தை பலவந்தமாக கழற்றிக்கொண்டு தப்பியோடியுள்ளனர். இனந்தெரியாதோர் காலணியைக் கழற்றிச் சென்ற பின்னர், அச்சிறுவன் அருகிலிருந்த கடைக்குச் சென்று, தனது தந்தையை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு சம்பவம் பற்றி தெரிவித்துள்ளான்.

உடனடியாக பாடசாலைக்கு விரைந்த தந்தை, மகனை அழைத்துக் கொண்டு பொலிஸ் நிலையம் சென்று சம்பவம் குறித்து முறைப்பாடு செய்துள்ளார்.

## சிறுமி மரணம் குறித்து...

சந்தேகநபர்கள் நால்வரிடம் மட்டுமன்றி தற்போது பிணையில் விடுக்கப்பட்டுள்ள ஹோட்டலின் வரவேற்பாளராக கடமையாற்றும் பெண்ணிடமும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

# மின்சார கட்டண குறைப்பு பிரேரணை வரவில்லை

ஜூலை முதலாம் திகதி முதல் அமலாகும் வகையில் மின்சார கட்டணத்தை குறைப்பதற்கான பிரேரணை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுமதிக்காக சமர்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்ட நிலையில், அவ்வாறு மின் கட்டணத்தை குறைப்பதற்கான பிரேரணையை இலங்கை மின்சார சபை முன்வைக்கவில்லை என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின்சார கட்டணத்தை குறைப்பது தொடர்பில் ஆணைக்குழுவின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை ஆராய்ந்த போதே இந்த விடயம் அறியக்கிடைத்துள்ளதாக ஆணைக்குழுவின் தவிசாளர் ஜனக ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

ஜூலை முதலாம் திகதி முதல் அமலாகும் வகையில் மின்சார கட்டணத்தை குறைப்பதற்கான பிரேரணை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுமதிக்காக சமர்பிக்கப்பட்டுள்ளதாக மின்சார சபை செவ்வாய்க்கிழமை (16) அறிவித்திருந்த நிலையில், குறித்த பிரேரணை தொடர்பில் உரிய மீளாய்வு செய்யப்பட வேண்டும் என ஜனக ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

## குருட்டுத் தன்மை 70ஆக உயர்வு

இந்த வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சையின் பின்னர் கண்பாதிப்பு ஏற்பட்டவர்களின் எண்ணிக்கை 10 ஆகுமென வைத்தியசாலையில் பணிப்பாளர் கூறியிருப்பது பொய்யாகும் என்றும் மதத்தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு முன்பாக புதன்கிழமை (17) ஒன்றுகூடிய மதத்தலைவர்கள் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

எனினும், இந்தக் குற்றச்சாட்டை முழுமையாக மறுத்த வைத்தியசாலையில் பணிப்பாளர் மஹேந்திர செனவிரத்ன, ஏப்ரல் 5ஆம் திகதி 34 சத்திரசிகிச்சைகள் மட்டுமே முன்னெடுக்கப்பட்டன. அன்றையதினம் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தியவர்களுக்கு மட்டுமே கண் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றார்.

# சரணடைந்த ஆனோல்ட் பிணையில் விடுவிப்பு

இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண தொகுதி கிளைக் கூட்டத்துக்கு பின்னர் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் வழங்குவதற்காக சட்டத்தரணியுடன் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றபோதே அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண தொகுதி கிளைக் கூட்டத்துக்கு பின்னர் ஏற்பட்ட மோதலில் காயமடைந்த ஒருவர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த தாக்குதலை யாழ். மாநகர முன்னாள் மேயர் இமானுவேல் ஆர்னோல்ட் மேற்கொண்டதாக காயமடைந்தவர் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதகர் ஜெரோம் வந்ததும் கைதாவார்

கடந்த சில நாள்களுக்கு முன்பு ஜெரோம் பெர்னாண்டோ என்ற போதகரால் பிற மதங்களை அவமதிக்கும் வகையில், கருத்துகள் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து போதகருக்கு எதிராக பலரும் முறைப்பாடு செய்தனர்.

போதகரின் வாக்குமூலங்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் ஊடாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில், நீதிமன்றம் அவருக்கு எதிராக பயணத்தடை விதித்த தினத்தன்று, அவர் நாட்டை விட்டு வெளியேறி விட்டதாக தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இடைக்கால உத்தரவுக்கு சட்டமா அதிபர் எதிர்ப்பு

சிறுநீரக சத்திரசிகிச்சைகளை மேற்கொள்வதற்கு தமது வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதியை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் எடுத்த தீர்மானத்தை இரத்துச் செய்யுமாறு கோரி குறித்த வைத்தியசாலையால் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த மனு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரும் நீதியரசருமான நிஷங்க பந்துல கருணாரத்ன, ஏ. மரிக்கார் ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிவையில் பரிசீலிக்கப்பட்டது.

அதன்போது, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானத்தை இடைநிறுத்தி இடைக்கால நிவாரணம் கோரியமை தொடர்பான உண்மைகளை முன்வைக்க எதிர்பார்ப்பதாக வைத்தியசாலை சார்பில் ஆஜரான சட்டத்தரணி அறிவித்தார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் விகம் டி அப்ரூ, அந்தக் கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்ததுடன், ஆட்சேபனைகளை முன்வைக்காமல் இவ்வாறு இடைக்கால நிவாரணம் கோருவது சாத்தியமில்லை என்று மன்றுக்கு சுட்டிக்காட்டியதை அடுத்து, மேலதிக பரிசீலனை 22ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# மஹிந்த உட்பட நால்வரின் பயணத்தடை முற்றாக நீக்கம்

இந்த உத்தரவை உடனடியாக குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு அறிவிக்குமாறு நீதிமன்ற பதிவாளருக்கு உத்தரவிட்ட நீதவான், பறிமுதல் செய்யப்பட்ட கடவுச்சீட்டுகள் நால்வரிடமும் வழங்குமாறு உத்தரவிட்டார்.

அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள ஹேவத்தமகே மஞ்சுள, ரமேஷ் பானுக, சமத் திவங்க, நிஷாந்த டி மெல் ஆகிய நால்வரையும் விடுதலை செய்யுமாறு கோட்டை நீதவான் உத்தரவிட்டுள்ளார். அவர்களை விடுதலை செய்யுமாறு சட்டமா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளதாக குற்றப் புலனாய்வுப் திணைக்களத்தினர் மன்றில் அறிவித்ததை அடுத்தே மேற்குறிப்பிட்ட உத்தரவை நீதவான் பிறப்பித்தார். முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர்களான பவித்ரா வன்னியாராச்சி, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, சஞ்ஜீவ எதிரிமான்ன, காஞ்சன ஜயரத்ன, நாமல் ராஜபக்ஷ, ரோஹித அபேகுணவர்தன, சி.பி.ரத்னாயக்க, சம்பத் அத்துகோரள, ரேணுக பெரேரா, சனத் நிஷாந்த, மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னகோன் உள்ளிட்ட 17 பேருக்கு எதிராக பயணத்தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 17 வருடங்களின் பின் ஆரூரன் விடுதலை

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பாதுகாப்பு செயலாளராக கடமையாற்றிய காலப்பகுதியில் கொள்ளுப்பிட்டி, பித்தல சந்தியில் வைத்து 2006 டிசெம்பர் 1ஆம் திகதி காலை 1.30 மணியளவில் தற்கொலை குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர் எனக் கூறப்படும் பொறியியலாளரான சிவலிங்கம் ஆரூரன் என்பவரே, விடுவிக்கப்பட்டார்.

இந்தப் பொறியியலாளர் உதவி பொலிஸ் அதிகாரி சிசில் டி சில்வாவிடம் வாக்குமூலம் அளித்ததை தவிர எந்தவொரு சாட்சியமும் அவருக்கு எதிராக முன்வைக்கப்படவில்லை.

இதுதொடர்பில் முறைப்பாட்டாளர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவந்ததை கவனத்தில் கொண்டு, சகல குற்றச்சாட்டுகளில் இருந்தும் பொறியியலாளரான சிவலிங்கம் ஆரூரன் விடுவிக்கப்பட்டார்.

இந்தத் தாக்குதலில் இராணுவத்தினர் இருவர் கொல்லப்பட்டு 14 பேர் படுகாயமடைந்திருந்தனர் என்பதுடன், காயமடைந்தவர்களில் சாதாரண பொதுமக்கள் ஏழு பேரும் அடங்கியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.




## இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரிப்பு

இலங்கை மத்திய வங்கியால் புதன்கிழமை (17) வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களுக்கு அமைய அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாய், திங்கட்கிழமையை விட 4 ரூபாயால் அதிகரித்துள்ளது.

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 302 ரூபாய் 42 சதமாகவும் விற்பனை விலை 316 ரூபாய் 18 சதமாகவும் பதிவாகியதுடன், செவ்வாய்க்கிழமை (16) கொள்வனவு விலை 305 ரூபாய் 43 சதமாகவும் விற்பனை விலை 318 ரூபாய் 79 சதமாக பதிவாகியது.

திங்கட்கிழமை (15) டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 306 ரூபாய் 18 சதமாகவும் விற்பனை விலை 319 ரூபாய் 96 சதமாகவும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த வியாழக்கிழமை (11) வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களுக்கு அமைய அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 308 ரூபாய் 66 சதமாகவும் விற்பனை விலை 322 ரூபாய் 70 சதமாகவும் பதிவாகியிருந்தது.

# எளிய முறையில் வழிபாடு செய்யுங்கள்

வழக்கு அமர்வில் உடைக்கப்பட்ட விக்கிரகங்களுடன் ஆலயத்தின் பூசாரி ஆஜராகியிருந்ததார்.

குறித்த வழக்கில் முறைபாட்டாளார்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது,

“இந்த வழக்கில் தொல்பொருட் திணைக்களம் முதன்முறையாக ஆஜராகி நீதிமன்றம் வழங்கிய உத்தரவை மீறி முறைப்பாட்டாளர்கள் செயற்பட்டதாக தகவல் கொடுத்திருந்தனர். இன்றும் (நேற்று) அந்த விடயத்தை கூறினார்கள்.

இருப்பினும் தொல்பொருள் தொடர்பான இந்தப் பிரதேசத்திலே மார்ச் மாதம் இடம்பெற்ற மோசமான விக்கிரகங்கள் உடைப்பு சம்பவத்தில் தொல்பொருட் திணைக்களம் ஒரு விரலைகூட அசைக்கவில்லை. அந்த விடயத்தை கரிசனையில் கூட எடுக்கவில்லை. அதனை மீள நிறுவும் படி நீதிமன்றம் உத்தரவை வழங்கிய பின்னரே மீள நிறுவியதால் தொல்பொருள் சேதமேற்பட்டதாக பொய்யான புகாரை தெரிவிப்பதாக நாம் மன்றுக்கு எடுத்துரைத்தோம்.

அந்தவிடயத்தில் இதுவரைக்கும் சந்தேகநபராக எவரையும் குறிப்பிடவில்லை. தொல்பொருட் திணைக்களம் வனவளத் திணைக்களம் போன்றவற்றால் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்படுகின்ற ஓர் இடத்தில் இப்படியான விக்கிரகங்களை உடைத்தமை ஒரு விசித்திரமான விடயம் என்பதையும் கூறினோம்.

எனவே இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு நீதவான் பொலிஸாருக்கு கட்டளை இட்டுள்ளார். அத்துடன் தொல்பொருளுக்கு சேதம் ஏற்பட்டால் அதன் மீது நடவடிக்கை எடுக்க முடியும். இது நீதிமன்ற கட்டளையை மீறி செயற்பட்டமை தொடர்பாக இருப்பதால் அதற்கான நடவடிக்கைகளை உரியமுறையிலே எடுக்குமாறு தொல்பொருட் திணைக்களத்துக்கு நீதிமன்றால் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தொல்பொருள் அடையாளங்கள் சேதமாகின்ற வகையில் செயற்படா வண்ணம், சமய சடங்குகளை எளியமுறையிலே செய்வதற்குமான, எச்சரிக்கையும் முறைப்பாட்டாளர்களான எங்களுக்கு மன்றால் வழங்கப்பட்டுள்ளது” என்றார்.

# “ஈழத் தமிழர்கள் கடின உழைப்பாளிகள்”

## தர்சன் செல்வராஜா மூலம் நிரூபணம்

■ க. அகரன்

ஈழத் தமிழர்கள் கடின உழைப்பாளிகள் என்பதை தர்சன் செல்வராஜா புலப்படுத்தி இருக்கிறார் என வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன் தெரிவித்தார்.

பிரான்ஸில் பாண் தயாரிக்கும் போட்டியில், இலங்கையை சேர்ந்த தர்சன் முதலிடம் பிடித்திருந்தார். அவருக்கு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். குறித்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டு உள்ளதாவது:

பிரான்ஸில் நடைபெற்ற மிகச்சிறந்த பாண் தயாரிப்பாளருக்கான போட்டியில் பிரான்ஸை சேர்ந்த இலங்கையரான தர்ஷன் செல்வராஜா முதலிடம் பெற்றுள்ளதுடன் ஒரு வருடத்துக்கு ஜனாதிபதி மாளிகைக்கு பாண் விநியோகிக்கும் உரிமையையும் பெற்றுள்ளார்.

தர்சன் செல்வராஜா வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலத்தின் பழைய மாணவர் ஆவார். அவரது வெற்றி, பாடசாலை சமூகத்துக்கும் முன்னுதாரணத்தை ஏற்படுத்தியுள்ளது என்றார்.



# இராணுவ வீரர் நினைவு தினம்

சப்ரகமுவ மாகாண இராணுவ வீரர் நினைவு தினம் நேற்று (17) இரத்தினபுரி புதிய நகரில் அமைக்கப்பட்டுள்ள ரணவிரு ஞாபகார்த்த நினைவு தூபி வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக சப்ரகமுவ மாகாண சபை தலைவர் கஞ்சன ஜயரத்தன, சப்ரகமுவ மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் பிரபாத் உதாகர், ரணவிரு அதிகார சபையின் உதவி பணிப்பாளர் ரோஹன விஜேரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தேசிய மட்ட கட்டுரை போட்டியில் சாதனை

■ எச்.எம்.எம் பர்ஸான்

தேசிய மட்ட பொதுநலவாய கட்டுரைப் போட்டியில், வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய மாணவி ஜே. ஜுமைனா ஹானி, தேசிய ரீதியில் இரண்டாம் இடம் பெற்றுள்ளதாக பாடசாலையின் அதிபர் என். சஹாப்தீன் தெரிவித்தார்.

பாடசாலையில் 10 ஆம் தரத்தில் கல்வி கற்கும் இவர், 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய மீலாத் பேச்சுப் போட்டியில் தேசியத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய ரீதியில் சாதனைகளை நிலைநாட்டிய ஜுமைனா ஹானிக்கும் பயிற்றுவித்த ஆசிரியர்களான எம். இந்துராணி, ஏ.எம் றிஹானா, ஜே.எம் நியாஸ் ஆகியோர்களுக்கும் அதிபர், பாராட்டுகளை தெரிவித்துள்ளார்.



### மாந்தை மேற்கில் காணிகளை

# மகாவலி வலயத்துக்குள் உள்ளீர்க்க விடமாட்டோம்

■ மன்னார் நிருபர்

மகாவலி ஜே வலயமாக்குவதற்கு மகாவலி அபிவிருத்தி அதிகார சபையால் மாந்தை மேற்கு பிரதேச செயலாளரிடம் தகவல் கோரப்பட்டுள்ள நிலையில், வளம்மிக்க காணிகளை மகாவலி வலயத்துக்குள் உள்ளீர்க்க நாம் தயாராக இல்லை என தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ் சிவகரன் தெரிவித்துள்ளார்.



இவ்விடயம் குறித்து அவர் நேற்று (17) விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;

அரசாங்கம் நில அபகரிப்பை மேற்கொள்வதற்கு பல்வேறு அரச திணைக்களங்களை பயன்படுத்தி வருவது போல், நன்கு திட்டமிட்ட வகையில் சிங்களர்களை குடியேற்றும் மறைமுக நோக்கில், மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 15 கிராம அலுவலர் பிரிவுகள் கோரப்பட்டுள்ளன.

பாலி ஆறு, இலுப்பைக்கடவை, அந்தோனியார்புரம், கள்ளியடி, ஆத்திமோட்டை, கூராய், கோவில்குளம், பள்ளமடு, விடத்தல்தீவு மேற்கு, விடத்தல்தீவு தெற்கு, விடத்தல்தீவு வடக்கு, விடத்தல்தீவு மத்தி, காயாநகர், பெரியமடு மேற்கு, பெரியமடு கிழக்கு ஆகிய பகுதிகளை உள்ளடக்கி மகாவலி ஜே வலயமாக்குவதற்கு மகாவலி அபிவிருத்தி அதிகார சபையால், மாந்தை மேற்கு பிரதேச செயலாளரிடம் தகவல் கோரப் பட்டுள்ளதாக அறிகின்றோம்.

இந்தத் திட்டத்தை முழுமையாக நிராகரிக்கின்றோம்.

இந்தப் பிரதேசம் மிகவும் வளம்மிக்க நிலப்பரப்பைக் கொண்டதாகும். பாலி ஆறு, சிப்பி ஆறு, பூங்கொடி ஆறு, பறங்கி ஆறு, கொடிகட்டி ஆறு, கல்பாடி ஆகிய ஆறுகளையும் மூன்று மாகாண நீர்ப்பாசன குளங்களையும் 200க்கு மேற்பட்ட சிறிய நீர்ப்பாசனக் குளங்களையும் 8,472 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்களையும் வளமிக்க மேட்டுநிலத்தையும் தன்னகத்தே கொண்ட பிரதேசம் ஆகும்.

நில அமைப்பு ரீதியாக, எந்த வகையிலும் மகாவலியுடன் தொடர்பு படுத்த முடியாத பகுதியை, மறைபொருள் நோக்கு நிலை நிகழ்ச்சி திட்டத்தில் தான் அரசாங்கம் இம்முயற்சியை மேற்கொள்வதாகக் கருதுகின்றோம். எனவே, இந்தத் தகவல் சேகரிப்பு முயற்சியை, அரசாங்கம் நிறுத்த வேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் எமது வளம்மிக்க காணிகளை, மகாவலி வலயத்துக்குள் உள்ளீர்க்க, நாம் அனுமதிக்க மாட்டோம் என்பதை தெளிவாக தெரிவித்துக் கொள்கிறோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மலையக மக்களுக்கு வழங்கிய கௌரவமாகும்

கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமானுக்கு ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் விசேட குழுவின் உறுப்பினரும் ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மலையக மக்களில் இருந்து ஒருவர் முதல் முறையாக ஆளுநராக நியமிக்கப்பட்டு உள்ளமையை கட்சிபேதங்கள் கடந்து அனைவரும் வரவேற்க வேண்டும். இ.தொ.



காவை வழிநடத்தும் செந்தில் தொண்டமான், கிடைக்கப்பெற்றுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் பதவியின் ஊடாக மேலும் பல சேவைகளை செய்ய வாழ்த்துகிறேன்.

கிழக்கு மாகாணத்தில் தமிழர் ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை மிக நீண்டகாலமாக உள்ளது. அதற்கு தகுதியான ஒருவராக செந்தில் தொண்டமான் உள்ளார். கிழக்கில் தமிழ் பேசும் மக்களுக்கு இந்த நியமனம் பல வெற்றிகளை எதிர்காலத்தில் பெற்றுக்கொடுக்குமென நம்புகிறேன். செந்தில் தொண்டமானின் நியமனம் என்பது சமகால அரசாங்கம் மலையக மக்களுக்கு வழங்கிய ஒரு கௌரவமாகவே பார்க்கிறேன். உயர்பதவிகளில் எப்போதும் கண்டுகொள்ளப்படாதிருந்த சமூகத்துக்கு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அளித்துவரும் முக்கியத்துவத்தை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

### முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்:

# கல்லடி கடற்கரையில் ஒன்று திரளுமாறு அழைப்பு

■ கனகராசா சரவணன்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முள்ளிவாய்க்கால் மே 18 தமிழின படுகொலையின் நினைவேந்தல் மட்டக்களப்பு, கல்லடி கடற்கரையில் இன்று (18) மாலை ஐந்து மணிக்கு அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதில் மக்கள் அனைவரும் ஒன்று கூடுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு வாவிகரை வீதியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினரின் காரியாலயத்தில் நேற்று (17) இடம்பெற்ற ஊடகவியலாளருடனான சந்திப்பில் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

2009 மே 18 காலப் பகுதியில், ஒரு இலட்சத்து 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக முன்னாள் மன்னார் ஆயர் அமரர் இராயப்பு யோசப் தகவல் வெளியிட்டிருந்தார். கிட்டத்தட்ட குறித்த இறுதிப் போர் தொடங்கிய காலம் முதல், மூன்று இலட்சம் மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

உண்மையிலேயே, எங்களுக்காக உயிர் நீர்த்தவர்களை நினைவு கூரவேண்டிய கடமை எங்களுக்கு இருக்கின்றது. கடந்த இரண்டு வருடங்கள், கொரோனாவால் அலுவலகங்கள், வீடுகளில் நினைவு கூர்ந்தோம். இந்தமுறை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு, அம்பாறை பிராந்தியம், கல்லடி கடற்கரையில் நினைவு கூர ஏற்பாடு செய்துள்ளோம்.

எனவே, இந்த நினைவேந்தலில் இனமத வேறுபாடுகளின்றி, ஓர் உணர்வு பூர்வமான தமிழ் பேசும் மனிதனாக, தமிழினத்துக்காக இதை நினைவு கூருவதற்கு அனைவரும் ஒத்துழைத்து, கல்லடி கடற்கரையில் மக்கள் அனைவரும் ஒன்று கூடுங்கள் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

# தமிழ் மக்களுக்கு நீதி வேண்டும்



■ வி.ரி சகாதேவராஜா

“அப்பாவி தமிழ் மக்களுக்கு நீதி வேண்டும்” என கல்முனை பாண்டிருப்பில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் உரையாற்றிய காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர் ஒன்றியம் மற்றும் பொதுமக்கள் இணைந்து நடத்தும் ‘மே 18 தமிழர் இன அழிப்பு நாள்’ முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தல் வாரத்தின் ஓரங்கமாக கடந்த இரு நாள்களும் பேரவல நினைவுப் பதாகைகள் பாண்டிருப்பு, தாதன் மண்டப முன்றலில் காட்சிப் படுத்தப்பட்டன.

இந்நிகழ்வில் முன்னாள் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், முன்னாள் நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர் சமூக செயற்பாட்டாளர் கே.கணேஷ் தர்சினி, பிரமுகர்களான தா.பிரதீபன் பிரபா, மகளீரணித் தலைவி நித்யகைலேஸ்வரி உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தனர்.

# கண்டி விபத்தில் தந்தையும் மகனும் பலி

■ ஷேன் செனவிரத்ன

கண்டி தர்மராஜ வித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள பிரதான வீதியில் பாதசாரி கடவையைக் கடந்துகொண்டிருந்த தந்தை, மகன் மீது வாகனம் மோதியதில் அவ்விருவரும் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் செலுத்திச் சென்ற வாகனமே இவ்விருவர் மீதும் மோதியுள்ளது.

இவ்விருவரும் செவ்வாய்க்கிழமை (16) இரவு 8 மணியளவில், பாதசாரி கடவையை கடந்துகொண்டிருந்த போதே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

கண்டியில் உள்ள தனியார் நிறுவமொன்றில் பணியாற்றும் கண்டி, பூவெலிகடையைச் சேர்ந்த சம்பத் ரொட்றிகோ (வயது 42) மற்றும் கண்டி டி.எஸ்.சேனாநாயக்க வித்தியாலயத்தில் பயிலும் அவருடைய மகன் விமந்த ரொட்றிகோ (வயது 10) ஆகிய இருவருமே மரணமடைந்துள்ளனர்.

சந்தேகநபரை கைது செய்துள்ள கண்டி பொலிஸார், வாகனத்தையும் கைப்பற்றியுள்ளனர். சந்தேகநபர் நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# மூத்த மகள் வன்புணர்வு: தந்தைக்கு விளக்கமறியல்

தன்னுடைய மூன்று மகள்களில் மூத்த மகளான 19 வயது யுவதியை, நீண்ட காலமாக பாலியல் வன்புணர்வு உட்படுத்தி வந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில், அந்த யுவதியின் தந்தையான 46 வயதான நபர், கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம், மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மொக்கா தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது. சந்தேகநபர் ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். இதன்போதே நீதவான் மொஹமட் பாரூக் மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

தன்னுடை தந்தை தன்னை தொடர்ச்சியாக அடித்து துன்புறுத்துவதாக அந்த யுவதி மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். அதன்பின்னர் தந்தை கைது செய்யப்பட்டார். அந்த யுவதியான பாடசாலை மாணவி வைத்திய பரிசோதனைக்காக, டிக்கோயா- கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

வைத்திய பரிசோதனையின் போது அந்த யுவதி பல வருடங்களாக பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என கண்டறியப்பட்டுள்ளது. வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட யுவதியின் தாய், கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் வெளிநாட்டுக்குப் பணிப்பெண்ணாகச் சென்றுள்ளார் என மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை அடுத்த தவணை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் போது, அறிக்கையை சமர்ப்பிப்பதாக மஸ்கெலியா பொலிஸார் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

யுவதி, வைத்தியசாலையில் சிகிச்சையை முடித்துக்கொண்டதன் பின்னர், நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் புனர்வாழ்வளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

# தூண்டிலில் கொளுவப்படும் இரைக்கு இரையாகிவிடாதீர்கள்

குளங்கள், நீர்த்தேக்கங்கள், உள்ளிட்டவற்றில் மீன் குஞ்சுகள் விடப்படும் நடவடிக்கைகள் அவ்வப்போது முன்னெடுக்கப்படுவதை அவதானித்து இருக்கின்றோம். அவை இனப்பெருக்கத்துக்கு மட்டுமன்றி சூழல் சமநிலையை பேணுவதற்காகவும் கையாளப்படும் முறைமைகளில் ஒன்றாகும்.

சூழல் சமநிலையை பேணாவிடின், பல்வேறான பிரச்சினைகளை நாமெல்லாம் சந்திக்கவேண்டிய நிலைமை ஏற்படும். கடந்த சில நாள்களாக கொளுத்தும் வெயில், இரவு வேளைகளில் அதிகூடிய வெப்பம் என, மனிதர்கள் மட்டுமன்றி விலங்குகளும் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளன.

மேலே குறிப்பிட்ட குளங்கள், நீர்த்தேக்கங்களில் பாரிய வலைகளை விரித்து, மீன்பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. எனினும். கரையோரங்களில் அமர்ந்திருந்து தூண்டிலிட்டு மீன்பிடிப்போர் இருக்கத்தான் செய்கின்றனர். அன்றாடம் ஜீவியம் நடத்துவதற்கு சில தூண்டில் போட்டு மீன்பிடிப்பர். தூண்டிலில் கொளுவப்படும் இரையைப் பொறுத்தே மீன்கள் அகப்படும்.

கடல், குளங்கள், நீர்த்தேக்கங்களில் பல்லின மீன்கள் இருப்பதைப் போலவே நமது நாட்டில் பல்லின, பல சமயங்களை பின்பற்றும், பல மொழிகளை பேசுவோர் வாழ்கின்றனர். அதில், மதமாற்றம் வெளிப்படையாகவே இடம்பெறுகின்றது. அதனை எவராலும் தடுத்துநிறுத்த முடியாது. ஏனெனில், தாங்கள் விரும்பும் மதத்தை பின்பற்ற முடியும். அதற்கு எவ்விதமான தடையுமில்லையென அதியுயர் சட்டமாக அரசியலமைப்பிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒருவரை மதம் மாற்றவேண்டுமாயின் மூளைச்சலவைச் செய்யவேண்டும். சிலர், காதோடு காதை வைத்தால் போல, பணத்தையும் சலுகைகளையும் கொடுத்து, மதத்தை மாற்றிவிடுகின்றனர். பத்திரிகைகளில் பிரசுரமாகும் விளம்பரங்களை பார்த்தால், அவை தெட்டத்தெளிவாகத் தெரியும். ஆக, தூண்டிலில் கொளுவப்படும் 'இரை' முக்கிய பங்கை வகிக்கின்றது.

வடக்கு,கிழக்கில் அடாத்தாக விகாரைகளை நிறுவி, சிறப்பு வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன. திருகோணமலையில், இந்து-பௌத்த மோதலுக்கு முஸ்தீபு விடுக்கப்பட்டதாக மற்றுமொரு தகவல் கசிந்துள்ளது.

இந்நிலையில்தான், மதங்களுக்கு இடையில் கசப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், போதகர் ஜெரோம் பெர்னாண்டோ பிரசங்கம் செய்திருந்தார். அதனை, கத்தோலிக்க சபை கண்டித்திருந்தது. உடனடியாக விசாரணைகளை முன்னெடுக்குமாறு, குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணித்திருந்தார்.

குறித்த போதகர் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு நீதிமன்றம் தடைவிதித்துள்ளது. எனினும், அந்தத் தடையைப் பெறுவதற்கு முன்னர், நாட்டிலிருந்து அவர் சென்றுவிட்டார். அவர், தனது நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் வெளிநாடு சென்றிருப்பதாகவும் மீண்டும் நாடு திரும்புவதாகவும் அறிவித்துள்ளார். நாடு திரும்புகையில் கைது செய்யப்படுவார் என பொலிஸ் தரப்பு கூறுகின்றது.

வெளியில் தெரியாவிட்டாலும் மதவிவகாரங்கள் கனன்று கொண்டுதான் இருகின்றன. அதற்கு எண்ணெய்யை வார்த்துவிடக்கூடாது. முறுகல்களை ஏற்படுத்துவதற்கு தூண்டில்கள் போடப்படுகின்றன. அதில் கொளுவப்பட்டிருக்கும் இரை, மூளையைச் சலவை செய்யும் இரையாகக் கூட இருக்கலாம். அதற்கு ஆசைப்பட்டு இரையாகிவிடக்கூடாது. ஆகையால், எந்த மதங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, விழிப்பாக இருக்கவேண்டுமென வலியுறுத்துகின்றோம்.




## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# முள்ளிவாய்க்கால் வலியுறுத்தும் சத்தியம்



புருஜோத்தமன் தங்கமயில்

தமிழ் மக்கள் முள்ளிவாய்க்கால் முடிவைச் சந்தித்து, இன்றோடு பதினான்கு ஆண்டுகளாகின்றன.

எட்டு தசாப்தங்களை எட்டிக் கொண்டிருக்கும் சுயநிர்ணய உரிமைக்கான தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் முள்ளிவாய்க்கால் என்பது எழுச்சிக்கும் வீழ்ச்சிக்குமான அடையாளக் களம்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் அதியுச்ச வெற்றிகள் என்று கொள்ளப்படும் அனைத்தும் ஆயுதப் போராட்ட காலத்திலேயே பெறப்பட்டவை. அதுவும், தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையேற்று போராட்டத்தை வழிநடத்திய முப்பது ஆண்டுகளில் கிடைக்கப்பெற்றவை.

வடக்கு - கிழக்கின் பெரும் பகுதியில், அரச தலையீடுகள் அற்ற இடைக்கால ஆட்சிக் கட்டமைப்பை இரண்டு தசாப்த காலம் விடுதலைப் புலிகள் முன்னெடுத்திருந்தனர். அதுதான், தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றில் நிகழ்த்தப்பட்ட அதியுச்சம் என்று கொள்ளலாம்.

அதுபோல, புலிகளின் இடைக்கால ஆட்சிக் கட்டமைப்பு, 2009 மே 18ஆம் திகதியோடு முடிவுக்கு வந்தது; ஆயுதப் போராட்டத்துக்கும் முடிவுரை எழுதப்பட்டது. அந்த முடிவுதான், தமிழ் மக்கள் இன்றும் மீண்டு எழ முடியாமல் திணறும் பெரு வீழ்ச்சியின் புள்ளி. அதிலிருந்து மீள்வதற்கான போராட்டத்தை தமிழ் மக்கள் மெல்ல ஆரம்பித்தாலும், கடந்த 14 ஆண்டுகளில் பெரிய அளவில் எதுவுமே நிகழ்ந்துவிடவில்லை.

முள்ளிவாய்க்கால் என்பது, ஆயுதப் போராட்டத்திற்கான முடிவுரை எழுதப்பட்ட இடம் மாத்திரமல்ல, 40,000க்கும் அதிகமானவர்களை அரச படையும் அதன் வெளிநாட்டு ஆதரவு சக்திகளும், உள்ளூர் துணைக்குழுக்களும் அழித்து ஒழித்த பகுதி. 12,000க்கும் மேற்பட்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்டமைக்கான குறியீட்டுக் களம். நினைவேந்தலை மாத்திரமல்ல, நீதிக்கான கோரிக்கைகளையும் சேர்த்து வைத்திருக்கின்ற இடம், முள்ளிவாய்க்கால் ஆகும்.

தமிழ் மக்களை அடக்கி ஒடுக்க வேண்டும் என்பதற்காக இலங்கை அரசும், விடுதலைப் புலிகளை முற்றாக அழிக்க வேண்டும் என்பதற்காக வெளிநாட்டு சக்திகளும் முன்னெடுத்த கோர யுத்தம், எந்தவித மனிதாபிமான தார்ப்பரியங்களும் போருக்கான அறமும் இன்றி முடித்து வைக்கப்பட்ட இடம் முள்ளிவாய்க்கால்.

உலகம் பூராவும் போர்க்குற்றங்கள், மனித உரிமைகள் பற்றி வகுப்பு எடுத்துக் கொண்டிருக்கின்ற மேற்கு நாடுகள் தொடங்கி, ஏதேச்சதிகாரம் செலுத்தும் சீனா போன்ற நாடுகள் வரையில், இறுதி யுத்தத்தில் இலங்கைக்கு கணிசமான உதவிகளை வழங்கியிருக்கின்றன.

போர் வலயத்துக்குள் சிக்கிய மக்களுக்கான மருத்துவ உதவி மறுக்கப்பட்டமை, உணவு வழங்கல் தடை செய்யப்பட்டமை என்று மனித குலத்துக்கு எதிரான அனைத்து குற்றங்களும் முள்ளிவாய்க்காலின் இறுதி நாள்களில் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டன. அதையெல்லாம், இந்த நாடுகள் எல்லாமும் எந்தவித குற்றவுணர்ச்சியும் இன்றிப் பார்த்துக் கொண்டும் இருந்தன.

புலிகளை அழிப்பதற்காக, எத்தனை ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டாலும் பரவாயில்லை என்ற மௌனம், இலங்கை அரசு புரிந்த போர்க்குற்றங்களை விடக் கொடுமையானது.

முள்ளிவாய்க்கால் என்பது, தமிழ் மக்கள் எந்தவித ஆதரவும் இன்றித் தனித்து விடப்பட்டமைக்கான சாட்சிக் கூடம். தமிழ் மக்கள் தங்களின் விடுதலைப் போராட்டத்தை இனி எப்படி முன்னெடுக்க வேண்டும், எதை முன்னெடுக்கக் கூடாது என்பதற்கான வரையறைகளை, முள்ளிவாய்க்கால் முடிவுகள் திணித்திருக்கின்றன. அந்தத் திணிப்பு திட்டமிட்டு நிகழ்த்தப்பட்டிருக்கின்றது.

கடந்த கால அனுபவங்களில் இருந்து, போராட்ட வடிவங்களை மாற்றிக் கொள்வதும், புதிதாக வடிவமைத்துக் கொள்வதும் போராடும் இனத்துக்கு வழக்கமானதுதான். ஆனால், போராடும் உணர்வை, முழுமையாக மழுங்கடிக்கச் செய்வதற்கான முயற்சிகளை தமிழர் தாயகம் எங்கும் விதைத்து, அதன் அறுவடைகளை தென் இலங்கையும் அதன் இணக்க சக்திகளும் தொடர்ந்தும் பெற்று வருகின்றன. அதற்கு, தமிழ்த் தரப்புகள் சிலவும் துணை போவதுதான் பெரும் அவலம்.

மதவாதம், சாதியவாதம், பிரதேசவாதம் தாண்டி, தமிழர் தாயகம் என்கிற அடிப்படையிலேயே தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் பேரெழுச்சி கண்டது. தமிழ்க் கட்சிகளும், ஆயுதப் போராட்ட இயக்கங்கள் பலவும் தங்களின் பலவீனங்களாக சாதியவாதம், பிரதேசவாதத்தை கொண்டிருந்த போது, விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் தலைமைத்துவத்துக்கு நகர்ந்தது அதையெல்லாம் தாண்டி நின்றமையாலாகும்.

ஆயுதப் போராட்ட இயக்கங்களாக இருந்து இன்று, அரசியல் கட்சிகளாக மாறிவிட்ட பல முன்னாள் இயக்கங்களும் இன்றைக்கும் சாதிய, மதவாத, பிரதேசவாத மனநிலையோடு செயற்பட்டு வருகின்றன. அதாவது, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸும், இலங்கை தமிழரசுக் கட்சியும் மறைமுகமாக சாதியவாத, பிரதேசவாத சிந்தனைகள் சார்ந்து இயங்குவது போல!

மேம்போக்காக பார்க்கும் போது, இன்றைக்கு களத்திலுள்ள அரசியல் கட்சிகளும் முன்னாள் இயக்கங்களும் இந்தப் பிரிவினைகள், வேறுபாடுகளுக்கு அப்பாலானவை என்பது போல காட்டிக் கொண்டாலும், உள்ளூர அந்த நெடி, எரிச்சலையூட்டும் அளவுக்கு இன்னமும் இருக்கின்றது என்பதுதான் மிகப்பெரிய பின்னடைவு.

அதுவும், முள்ளிவாய்க்கால் போன்ற வீழ்ச்சிக்குப் பின்னாலும், இவ்வாறான பிரிவினைகள், வேற்றுமைகளை பிடித்துக் கொண்டிருப்பது என்பது, தமிழர் விரோத சக்திகளுக்கு சிவப்புக் கம்பளம் விரித்து, வெண் சாமரம் வீசி வரவேற்பதற்கான ஏற்பாடுகளை செய்திருக்கின்றது.

இன்றைக்கு முள்ளிவாய்க்கால் என்பது, நினைவேந்தலை முன்பெடுப்பதற்கான களம் என்ற அளவில் சுருக்கப்பட்டுவிட்டது. அதிலும், தேர்தல் நோக்கு அரசியல்வாதிகளும், அக - புற விரோத சக்திகளின் ஏவல் தரப்புகளும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்ற விடயத்தையே கேலிக்கூத்தாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

இதனால், முள்ளிவாய்க்கால் நினைவுகளை ஆன்மாவோடு கொண்டு சுமக்கும் தமிழ் மக்களில் பெரும்பாலானோர், நினைவேந்தல் குளறுபடிகள் களத்தில் இருந்து விலகி நிற்கிறார்கள். இது, தொடர்ச்சியாகப் போராடி வரும் சமூகத்தின் போர்க்குணத்தின் மீது ஊற்றப்படும் விசமாகும்.

முள்ளிவாய்க்கால் நினைவுகளை, தமிழ் மக்களிடம் இருந்து பிரிந்தெடுப்பது என்பது தென் இலங்கைக்கும் அதன் நேச சக்திகளுக்கும் அவசரமாகக் தேவைப்படும் ஒன்று. விடுதலைப் புலிகளை அழித்தால் போதும், தமிழ் மக்களின் போர்க்குணத்தினை முற்றாக முடக்கிவிடலாம் என்று அந்தத் தரப்புக்கள் நம்பின. ஆனால், தமிழ் மக்கள், முள்ளிவாய்க்காலை போர்க்குணத்தின் ஓர்மத்தின் பகுதியாகவே மாற்றினார்கள்.

உறவுகளை நினைவுகூர மாத்திரமல்ல; அவர்களுக்கான நீதியை நிலைநாட்டவும் முள்ளிவாய்க்காலை ஒரு களமாக மாற்றினார்கள். அதுவும், முள்ளிவாய்க்கால் முடிவுகளை சந்தித்து சில மாதங்களுக்குள்ளேயே அதற்கு தயாராகிவிட்டார்கள். இதனை தென் இலங்கையோ, அதன் நேச சக்திகளோ எதிர்பார்க்கவில்லை.

அதனால்தான், தமிழ் மக்களின் போர்க்குணத்தின் குறியீடாக மாறிவிட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை சிதைப்பதற்காக தங்களின் ஏவல் சக்திகளை வைத்து குழப்பங்களை நிகழ்த்துகின்றன. அதைப் புரிந்து கொள்ளாது, தமிழ்த் தேசிய கட்சிகளும் வாக்கு அரசியல் என்ற குறுகிய சிந்தனைகளால் மறைமுகமாகத் துணைபோகின்றன.

இன்றைக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஏட்டிக்கு போட்டியாக தமிழ்த் தேசிய தரப்புகள் நடத்துகின்றன. அங்கு, அரச பயங்கரவாதத்தால் கொல்லப்பட்டவர்கள் நினைவு கூரப்படுவதைக் காட்டிலும், தாமே முதன்மையானவர்கள் என்கிற தன்முனைப்பு மனநிலையே வெளிப்படுகின்றது.

ஏனெனில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் காலங்களில், தமிழ்த் தேசிய தரப்புகள் நிகழ்த்திவரும் நடவடிக்கைகளைப் பார்த்தால் அது தெளிவாக புரியும். 14 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும்கூட, முள்ளிவாய்க்காலில் ஒருமித்து ஒன்று கூடுவதற்கு சில தமிழ்த் தரப்புகள் தயாராக இல்லை. அவர்கள், தனி ஆவர்த்தனம் செய்யவே நினைக்கிறார்கள். அதனால், பாதிக்கப்படுவது தமிழ் மக்களின் நீதிக் கோரிக்கைகளேயாகும்.

முள்ளிவாய்க்காலில் இழக்கப்பட்ட உயிர்களுக்கும் சிந்தப்பட்ட குருதிக்கும் நீதி கோரி போராடுதல் என்பது, எதிரிகளை தண்டிப்பதனூடாக மாத்திரம் நிகழ்வதல்ல. முள்ளிவாய்க்கால் முடிவு தமிழ் மக்கள் மீது ஏன் திணிக்கப்பட்டதோ, அதைத் தாண்டி நின்று போராடுவதற்கான ஓர்மத்தையும் ஒற்றுமையையும்கூட ஒருங்கிணைப்பதற்கான களமாகவும் இருக்க வேண்டும். அதுதான், உண்மையான நினைவேந்தலாக இருக்க முடியும்.



## வாழ்வியல் தரிசனம்

அனுபவிக்காதவன் அர்த்தமற்ற வாழ்க்கையை வாழ்கின்றான். எனினும் நீங்கள் எதிர்பார்க்கும் களிப்பு நிலையில் நேர்மையும் சத்தியமும் முழுமையாக இருக்க வேண்டும். பாவங்கள் செய்து இன்பங்களைத் தேடமுடியாது. அவை எவரையும் உருப்பட வைத்திடாது.

ஒவ்வொரு பருவத்திலும் அதற்கேற்ப, பணிகளைச் செய்ய வேண்டும். கல்வி கற்கும் காலத்தில் கற்க வேண்டும். அதை இடையில் நிறுத்தலாகாது.

தொழில் செய்து உழைக்கும்போது, அதன் மூலம் குடும்பத்துக்கும் முடிந்த அளவுக்கு சுற்றிவாழும் சமூகத்துக்கும் சிறிய உதவிகளையாவது செய்ய வேண்டும்.

எமக்கானது மட்டுமே வாழ்க்கையல்ல! உலகையும் நோக்க வேண்டும். இதற்கு ஒரே வழி, சுதந்திரமாக வாழும் பூமியை நோக்குக! அதனால், இந்தப் பூமிக்கு ஏதாவது நல்லவற்றைச் செய்ய வேண்டும் என்கின்ற எண்ணங்கள் மேலோங்கும்.

நெஞ்சத்தைக் கட்டிவைக்க வேண்டாம். பரந்த உணர்வே உண்மை நிலைகளைத் தெரியப்படுத்தும். உணர்க!

கருணை, அன்பு மூலம் உலகை ஒருமையாக இணைத்து வைக்க முடியும். பாரிய உலகு எமக்கானது!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### நீர் கட்டணம் செலுத்த வசதி இல்லை

மாத்தளை நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிரதான காரியாலயத்தில், பொதுமக்கள் நீர் கட்டணங்களைச் செலுத்துவதற்கு எந்தவிதமான வசதிகளும் இல்லாமையால், பாரிய அசௌகரிங்களுக்கு முகம்கொடுத்து வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

பலகோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டு, 2022ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட மாத்தளை நீர்வழங்கல் சபையின் பிரதான காரியாலயத்தில், நீர்க்கட்டணங்களைச் செலுத்திட, உரிய வசதிகள் இல்லை என, பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு நிரந்தர காரியாலயம் 2022க்கு முன்னர் வரை இல்லாத காரணத்தால், மாத்தளை நகரில் பல இடங்களில் மாறிமாறி காரியாலயங்களை இயக்கியிருந்தனர்.

இறுதியாக, தர்மபால மாவத்தையில் கட்டடத்தை வாடகைக்குப் பெற்று, வடிகாலமைப்பு சபையின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்பின்னர், கூப்பியாங்கொடை வீதியில் தனியாருக்கு சொந்தமான காணியை கொள்வனவு செய்து, நீர்வழங்கல் சபைக்குத் தேவையான சகல வசதிகளுடனும் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது.

இருப்பினும் பொதுமக்கள் நீர் கட்டணத்தை செலுத்தும் வகையில் எவ்வித வசிகளும் இந்தப் பிரமாண்ட கட்டடத்தில் ஏற்படுத்தப்படவில்லை. இது குறித்து அதிகாரிகள் கவனமெடுத்து பொது மக்களின் குறைகளை களைய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

தி. சுகுமார்




## சர்வதேச உயர் குருதி அழுத்த தினம்:
# ஆரையம்பதியில் விழிப்புணர்வு

சர்வதேச உயர் குருதி அழுத்த தினத்தையொட்டி, மட்டக்களப்பு, ஆரையம்பதி பிரதேச செயலக அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு குருதி அழுத்த பரிசோதனை, இரத்த பரிசோதனை உள்ளிட்ட தொற்றா நோய் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆரையம்பதி பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச சுகாதார வைத்தியதிகாரி இ. உதயகுமார் தலைமையில் நடைபெற்ற விழிப்புணர்வு செயற்றிட்டத்தில், பிரதேச செயலாளர் திருமதி என். சத்தியானந்தி பிரதம அதிதியாகவும் ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளர் டொக்டர் எஸ். குணராஜசேகரம் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

ரீ.எல் ஜவ்பர்கான்





## விசேட தேவை உடையவர்களுக்கான
# வேலைவாய்ப்பு கருத்தரங்கு

காத்தான்குடியில் விசேட தேவையுடையவர்களுக்கான வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுத்தல் தொடர்பான கருத்தரங்கு, காத்தான்குடி பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் அனுசரணையில் செவ்வாய்க்கிழமை (16) நடைபெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் உதய சிறீதரின் ஆலோசனையுடனும் வழிகாட்டலிலும் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் கே. சுரேந்திரன், மனிதவள உத்தியோகத்தர்களான யு. சுரேஸ்குமார், எஸ். செல்வமலர் சிறுகைத்தொழில் உத்தியோகத்தர் ஏ.எல்.எஸ் ஹைறியா, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் முஹம்மட் இர்ஃபான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எம்.எஸ்.எம் நூர்தீன்





# கபிலவத்தை கங்கையில் அபிஷேக வழிபாடு

உலக சேமத்தை கருத்தில்கொண்டு, சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையிலான 32 பேரடங்கிய குழுவினர், மொனராகலையை அடுத்துள்ள அடர்ந்த காட்டுக்குள், 'ஆதி கதிர்காமம்' என அழைக்கப்படும் வரலாற்று பிரசித்தி பெற்ற கபிலவத்தையில், ஷப்தகன்னியர்கள் உறைந்த கபிலவத்தை கங்கையில் மரகதலிங்கத்துக்கு அபிஷேக வழிபாடு செய்தனர். சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், உப தலைவர் மனோகரன் ஆகியோரின் நெறிப்படுத்தலில், நமசிவாய மகேஸ்வரன் சுவாமிகளின் பங்களிப்பில் நடைபெற்ற இவ் வழிபாட்டில் பிரபல நாதஸ்வர வித்துவான் யாழ். நல்லூரைச் சேர்ந்த பாலகுமாரன், கனடா அன்பர் குமார் உள்ளிட்ட பிரமுகர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

வி.ரி சகாதேவராஜா




# மாற்றுத் திறனாளிகளுக்கு தொழில் வாய்ப்பு

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) ஆலோசனைக்கு அமைவாக 'மாற்றுத் திறனாளிகளைத் தொழிலில் ஈடுபடுத்துதல்' எனும் திட்டத்துக்கு அமைய, தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் உள்ள தெரிவு செய்யப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான நேர்முகத் தேர்வும் தொழில் விழிப்பூட்டல் நிகழ்வும் நேற்று முன்தினம் (16) பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ. ஸ்ரீபதி தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வை, மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களம் ஏற்பாடு செய்திருந்தது.

இதில் உதவி பிரதேச செயலாளர் இரா. பிரசாந்தன்,சமூக சேவை உத்தியோகத்தர் ப.சுதன், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் த.பிரணவன், மனிதவலு அபிவிருத்தி உத்தியோகத்தர் சாஜிதா பர்வீன், சமூக சேவைகள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஜெசீர் உட்பட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

ஹஸ்பர்




# அன்னையர் தினக் கொண்டாட்டம்

இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட 'அன்னையர் தின கொண்டாட்டம்' பொகவந்தலாவை, சீனக்கொலை DP டிவிசன் பொது விளையாட்டு மைதானத்தில் சனிக்கிழமை (13) மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

இதன்போது வெற்றிபெற்றவர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன.



# 'மரங்களை வளர்க்கும் மனங்களை வளர்ப்போம்'

ஒரு மில்லியன் மரங்களை நடும் வேலைத்திட்டத்தின் கீழ், அக்கரைப்பற்று, பட்டியடிப் பிட்டி, குடியிருப்புப் பிரதேசங்களில் செவ்வாய்க்கிழமை (16) நிழல் தரும் மரங்கள் வாய்க்கால், வீதி ஓரங்களில் நடப்பட்டன.

அக்கரைப்பற்று, கல்ஓயா வலதுகரை திட்ட முகாமையாளர் அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மர நடுகை திட்டத்தில் திட்ட முகாமையாளர், நீர்ப்பாசன பொறியியலாளர், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

'மரங்களை வளர்க்கும் மனங்களை வளர்ப்போம்' எனும் தொனிப்பொருளின் கீழ், ஐந்து வருடத்துக்குள் ஒரு மில்லியன் மரங்களை அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல பிரதேசங்களிலும் நடுவதற்கான இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எம்.எஸ்.எம் ஹனீபா



## விசேட தேவையுடையோர் பாடசாலைக்கு
# கதிரைகள் அன்பளிப்பு

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட காவத்தமுனையில் இயங்கி வரும் விசேட தேவையுடையோர் பாடசாலைக்கு செவ்வாய்க்கிழமை (16) ஒரு தொகுதி கதிரைகள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

வாழைச்சேனை அந்-நூர் தேசிய பாடசாலையின் 2004 க.பொ.த சாதாரண தர பழைய மாணவர் ஒன்றியத்தால் இந்தக் கதிரைகள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

விசேட தேவையுடையோர் பாடசாலையின் முகாமையாளர் ஏ.ஜீ பிர்தௌஸ், பழைய மாணவர் அமைப்பின் தலைவர் எம்.எஸ்.ஏ பரூஸூர், உப தலைவர் வை.பி சியான், நிர்வாக உறுப்பினர்களான எம்.எஸ் கலீல் ரஹ்மான், ஏ.எச் கலீம் ஆகியோர் நிகழ்வில் கொண்டனர்.

எச்.எம்.எம் பர்ஸான்




# கதிர்காம யாத்திரிகர்களுக்கு இராணுவம் உதவி

யாழ்ப்பாணம், செல்வச்சந்நிதி முருகன் கோவிலில் இருந்து கதிர்காமம் நோக்கி புறப்பட்ட ஜெயாவேல்சாமி தலைமையிலான பாதயாத்திரை குழுவினர், புதன்கிழமை (17) காலை திருகோணமலை திரியாயை வந்தடைந்தனர்.

புல்மோட்டையில் இருந்து திரியாய் வந்தடைந்த யாத்திரிகர்களை, இராணுவத்தினரும் பௌத்த பிக்குகளும் வரவேற்றனர். யாத்திரிகர்களுக்கு காலை ஆகாரம் வழங்கி, மருத்துவ முகாம் வசதியையும் ஏற்பாடு செய்திருந்தனர். இந்த யாத்திரிகர் குழுவில் இதுவரை 68 யாத்திரிகர்கள் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வி.ரி சகாதேவராஜா




# ஊடகவியலாளர்களுக்கு செயலமர்வு

தேசிய சமாதான பேரவையின் அனுசரணையுடன் சேர்விங் ஹியூமானிட்டி பவுன்டேசன் கிண்ணியா அமைப்பினரின் ஒருங்கிணைப்பில், பிரதேச சர்வ மத குழுவினருக்கும் திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கும் புராதன மற்றும் சமூக ஊடகம் தொடர்பான செயலமர்வு திருகோணமலை சர்வோதய மண்டபத்தில் புதன்கிழமை (17) நடைபெற்றது.

இந்நிகழ்வில் வளவாளராக சபீர் (பயிற்றுவிப்பாளர், ஹேஷ்டெக் நிறுவனம்), தேசிய சமாதானப் பேரவையின் சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் எம்.யூ மதனி உவைஸ், சத்யராஜ் (மொழிபெயர்ப்பாளர்), சேர்விங் ஹியூமானிட்டி பவுன்டேசனின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆஷிக் அலாப்தீன் உள்ளிட்ட சமூகமட்ட செயற்பாட்டாளர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

அ. அச்சுதன்




# ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

'பாராளுமன்ற சார சங்ஹிதா' ஆய்வுப் புலமை இலக்கிய நூலின் நான்காவது தொகுதிக்கான ஆக்கங்கள் தற்பொழுது கோரப்பட்டுள்ளன.

இதன் மூன்றாவது தொகுதி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் அண்மையில் (11) பாராளுமன்றத்தில் வெளியிடப்பட்டது. இதன்போது பாராளுமன்ற சார சங்ஹிதா நான்காவது தொகுதிக்கான ஆக்கங்கள் கோரல் குறித்து பாராளுமன்ற சட்டவாக்க சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளரும் தொடர்பாடல் திணைக்களத்தின் பதில் பணிப்பாளருமான எச். ஈ. ஜனகந்த சில்வா உத்தியோகப்பூர்வமாக அறிவித்தார். அதற்கமைய கடந்த 11ஆம் திகதி முதல் நான்காவது தொகுதிக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

சட்டவாக்க செயற்பாடுகள் தொடர்பில் தற்கால மற்றும் எதிர்கால சமூகத்துக்கு தேவையான அறிவை சமூகமயப்படுத்துதல் 'பாராளுமன்ற சார சங்ஹிதா' ஆய்வுப் புலமை இலக்கிய நூலின் நோக்கமாகும். இலங்கை பாராளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களத்தின் பதிப்பாக இந்தப் புலமை இலக்கிய நூல் வெளியிடப்படுவதுடன் இதுவரை மூன்று தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

அதற்கமைய, நவீன தொனிப்பொருட்கள் தொடர்பில் கவனம் செலுத்தி 'பாராளுமன்ற சார சங்ஹிதா' ஆய்வுப் புலமை இலக்கிய நூலின் நான்காவது தொகுதிக்கான ஆக்கங்கள் தற்பொழுது கோரப்பட்டுள்ளன. புலமை ஆக்கங்களை எழுதுவதற்கு ஆர்வம் காட்டும் எவருக்கும் இந்த நூலுக்கான ஆக்கங்களை சமர்ப்பிக்கலாம். இதன்போது கீழே குறிப்பிட்டுள்ள தொனிப்பொருட்களின் கீழ் வழங்கப்பட்டுள்ள முறையில் உரிய வழிகாட்டல்களை பின்பற்றி ஆக்கங்களை சமர்ப்பிக்க முடியும்.

* உலகமயமாக்கலுக்குப் பின்னரான சூழலில், பாராளுமன்ற ஜனநாயகத்தின் நிகழ்காலம் மற்றும் எதிர்காலம்
* உலகமயமாக்கலுக்குப் பின்னரான நிலைமையும் பாராளுமன்ற ஜனநாயகமும்
* பாராளுமன்ற குழு முறைமையும் திறந்த பாராளுமன்றமும்
* உலகமயமாக்கலின் பின்னர் தேசிய பொருளாதார மூலோபாயங்கள்
* நவீன ஊடகப் போக்குகளின் மத்தியில் தேசிய தகவல் பாதுகாப்பு
* உலகமயமாக்கலின் பின்னரான சூழலில் பிரஜைகளின் வகிபாகம்
* உலகமயமாக்கலின் பின்னரான போக்குகளின் மத்தியில் கல்வி மறுசீரமைப்பு
* கலாசார வளர்ச்சியின் பின்னரான பொதுவெளி மற்றும் தனிநபர் சமூகமயமாக்கல்

ஆக்கங்கள் தயாரிக்கப்பட வேண்டிய முறை:

சுருக்கம்: 250 - 300 சொற்களுக்குள் இருத்தல் வேண்டும்.

சிறப்புச் சொற்கள்: குறைந்தது 3 அல்லது கூடியது 5 சிறப்புச் சொற்கள் காணப்படல் வேண்டும்.

1. அறிமுகம்
2. ஆய்வு முறை
3. கலந்துரையாடல்
4. மதிப்பாய்வு
5. உசாத்துணைகள்

வழிகாட்டல்கள்

1. 3,000 - 5,000 சொற்கள் காணப்படல் வேண்டும்.
2. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஆக்கங்கள் தயாரிக்கப்படலாம்.
3. பயன்படுத்த வேண்டிய எழுத்துருக்கள் (Fonts): சிங்களம் FM Abhaya, தமிழ் Bamini மற்றும் ஆங்கிலம் Times New Roman
4. எழுத்துருவின் அளவு: சிங்களம் மற்றும் தமிழ் - 12, ஆங்கிலம் - 11
5. வசனங்களுக்கிடையிலான இடைவெளி: 1.5 இடைவெளி காணப்பட வேண்டும்.
6. ஒவ்வொரு பக்கமும் அதன் அடிப்பகுதியில் இலக்கமிடப்பட்டிருத்தல் வேண்டும்.
7. உசாத்துணைகள் மற்றும் மூலங்கள் APA முறையில் குறிப்பிடப்பட வேண்டும்.
8. தமிழ் மற்றும் ஆங்கில மொழி ஆக்கங்களின் சுருக்கம் ஆங்கிலத்திலும், ஆங்கில ஆக்கங்களின் சுருக்கம் தமிழ் அல்லது சிங்கள மொழியிலும் தயாரிக்கப்பட வேண்டும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை தொலைபேசி இலக்கம் 0778886676, 011277328 (ஆசிரி ஹபுகொட) இலங்கை பாராளுமன்றம் ஊடக அதிகாரியை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். ஆக்கங்கள் 13.08.2022 ஆம் திகதிக்கு முன்னர் journal.slparliament@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

ஈரான்

# பத்து நாள்களில் 42 பேருக்கு தூக்குத் தண்டனை

அண்மைக்காலமாக ஈரானில் அதிகளவிலான தூக்குத் தண்டனைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.


அதிலும் குறிப்பாக கடந்த பத்து நாள்களில் மட்டும் 42 பேர் தூக்கிடப்பட்டுள்ளதாக அந்நாட்டைச் சேர்ந்த மனித உரிமை அமைப்பான IRH தகவல் வெளியிட்டுள்ளது.

அதாவது, கடந்த பத்து நாள்களில் ஒவ்வோர் ஆறு மணி நேரத்திற்கும் ஒருவர் தூக்கிலிடப்பட்டு வருவதாகவும், இப்படி தூக்கிலிடப்பட்டவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பலுச் பகுதியைச் சேர்ந்த சிறுபான்மையினர் எனவும் அந்த அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

அதே போல் சுவீடன் நாட்டைச் சேர்ந்த ஒருவரும் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தியதாக குற்றம் சாட்டப்பட்டு தூக்கிலிடப்பட்டுள்ளார்.

இதற்கு சுவீடன் அரசு கண்டனம் தெரிவித்துள்ளது. ஆனால், பெரும்பாலான தூக்குத் தண்டனைகள் போதைப் பொருள் வைத்திருந்ததற்காகத்தான் வழங்கப்பட்டுள்ளன.

ஈரான் அரசின்



மனிதத்தன்மையற்ற இந்தச் செயலுக்கு பல்வேறு தரப்பினரும் தங்கள் கண்டனங்களை பதிவு செய்து வருகின்றனர். எனினும் ஈரான் அரசு, தூக்கு தண்டனைகள் வழங்குவதை நிறுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



அமெரிக்கா

## பியரால் இயங்கும் மோட்டார் சைக்கிள்

பியரால் இயங்கும் மோட்டார் சைக்கிளைக் கண்டுபிடித்து அமெரிக்காவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சாதனை படைத்துள்ளார்.

மினசோட்டா என்ற மாகாணத்தில் வசிக்கும் கே மைல்மல்சன் என்ற இளைஞரே குறித்த மோட்டார் சைக்கிளைக் கண்டுபிடித்துள்ளார்.

இந்த மோட்டார் சைக்கிள் 240 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லும் எனவும், இதற்கு எரிபொருளாக பியரைப் பயன்படுத்த முடியும் எனவும் கூறப்படுகின்றது.

நைஜீரியா


## 100 மணி நேரத்தில் இப்படியொரு சாதனையா?

நைஜீரியாவைச் சேர்ந்த 27 வயதான பெண்ணொருவர் தொடர்ந்து 100 மணி நேரம் சமைத்து உலக சாதனை படைத்துள்ளார்.

சமூகவியல் பட்டதாரியும், சமையல் கலை நிபுணருமான ஹில்டா பாஸே என்பவரே உள்ளூர் உணவுகள், வெளிநாட்டு உணவுகள் என 110 உணவு வகைகளை சமைத்து அசத்தியுள்ளார்.

இதன்போது சமையல் கூடத்தை சுற்றிலும் திரண்ட பார்வையாளர்கள் ஹில்டாவைத் தொடர்ந்து உற்சாகப் படுத்திய வண்ணம் இருந்தனர்.

இந்நிலையில், 2019




ஆம் ஆண்டு, தொடர்ந்து 88 மணி நேரம் சமைத்து கின்னஸ் சாதனை படைத்திருந்த இந்திய பெண்மணி லதா டாண்டன், புதிய சாதனையாளரான ஹில்டா பாஸேக்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

மும்பை

## அனுஷ்கா சர்மா, அமிதாப் பச்சன் மீது நடவடிக்கை?



பிரபல பொலிவூட் நடிகர்களான அனுஷ்கா சர்மா மற்றும் அமிதாப் பச்சன் மீது மும்பை பொலிஸார் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை அமிதாப் பச்சன் படப்பிடிப்புக்கு செல்ல, தனது ரசிகர் ஒருவரின் உதவியை நாடியுள்ளார். அதேபோன்று அனுஷ்கா சர்மாவும் வீதி மறிக்கப்பட்டிருந்ததால் தனது மெய் பாதுகாவலருடன் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார்.

இந்நிலையில் சமூக வலைத்தளங்களில் இருவரும் ஹெல்மட் இல்லாமல் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த புகைப்படங்கள் வெளியானதைத் தொடர்ந்து இருவருக்கும் எதிரான புகார்கள் அதிகரிக்கத் தொடங்கின.

இதனைத் தொடர்ந்து மும்பை பொலிஸார், அனுஷ்கா சர்மா மற்றும் அமிதாப் பச்சன் மீது நடவடிக்கை எடுக்க முன்வந்துள்ளனர்.


இந்நிலையில் "நான் எந்தப் போக்குவரத்து



விதிகளையும் மீறவில்லை; நாங்கள் மும்பையில் உள்ள தெருவில் ஷூட்டிங் செய்துகொண்டிருந்தோம். நான் விளையாட்டாக படக்குழுவில் உள்ள ஒருவரின் பைக்கில் ஏறினேன். நாங்கள் ஒரு இன்ச் கூட நகரவில்லை. நான் உண்மையாக வேலைக்கு தாமதமாகும் போது இதுபோல செய்வதுண்டு. ஆனால் ஹெல்மட் அணிந்து அனைத்து வீதி விதிகளையும் பின்பற்றித் தான் செல்வேன். உங்களுக்கு கவலையை ஏற்படுத்தியதற்காகவும் போக்குவரத்து விதிகளை மீறும் தவறான கருத்தை ஏற்படுத்தியதற்காக என்னை மன்னித்துவிடுங்கள். நான் விதிகளை மீறவில்லை" என அமிதாப் பச்சன் விளக்கமளித்துள்ளார்.

கோவை

## காரில் வந்து தங்க சங்கிலி பறிப்பு; திருடர்களுக்கு அதிர்ச்சி



தனியாக நடந்து சென்ற பெண்ணிடம், காரில் வந்த இருவர் தங்கச் சங்கிலி பறிக்க முற்பட்ட சம்பவம் கோவையில் இடம்பெற்றுள்ளது.

அப்பகுதியில் குறித்த யுவதி நடைப் பயிற்சி செய்துகொண்டிருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து புகார் அளிக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் சிசிடிவி காட்சிகளை கைப்பற்றி விசாரணை மேற்கொண்டனர்.

இதில் வாடகைக்கார் ஓட்டுநர் சக்திவேலைக் கைது செய்த பொலிஸார், அவர் கொடுத்த தகவலின் பேரில் அவருடன் காரில் சென்று தங்க சங்கிலி பறிப்பில் ஈடுபட்ட ஸ்விக்கி ஊழியரான அபிசேக் என்பவரையும் மடக்கிப்பிடித்தனர்.

அவர்களிடம் கொள்ளை முயற்சி குறித்து விசாரித்துக் கொண்டிருந்த போது பொலிஸாரிடம் இருந்து தப்பி ஓடிய இருவரும் வழுக்கி விழுந்ததால் கைகளில் எலும்பு முறிவு ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட சக்திவேல், அபிசேக் ஆகிய இருவரையும் பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

சிசிடிவி காட்சி இல்லையென்றால் இந்த வழக்கில் துப்பு துலக்கி இருக்க முடியாது என்று குறிப்பிட்ட பொலிஸார், மக்கள் தங்கள் வீடுகளுக்கு வெளியே சிசிடிவி பொருத்துவது கொள்ளை சம்பவங்களை தடுக்கவும், கொள்ளையர்களை அடையாளம் காணவும் உதவும் என்றும் சுட்டிக்காட்டினர்.


மராட்டியம்

## கர்ப்பிணியின் உயிரைப் பறித்த வெயில்

கர்ப்பிணியொருவர் வெயிலின் தாக்கத்தால் உயிரிழந்த சம்பவம் மராட்டியத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மராட்டிய மாநிலம், பால்கர் மாவட்டத்தைச் சேர்ந்த 21 வயதான கர்ப்பிணியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். 9 மாத கர்ப்பிணியான இவருக்கு கடந்த வெள்ளிக்கிழமை உடல்நல குறைவு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

எனவே அவர் வீட்டில்



இருந்து கோடை வெயிலில் 7 கிலோ மீற்றர் தூரம் நடந்து வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார். இதன்போது அவரது உடல் நிலை மேலும் மோசமடைந்துள்ளது.

இதனையடுத்து அவரை குடும்பத்தினர் அம்புலன்ஸ் மூலம் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

எனினும் அவர் செல்லும் வழியிலேயே பரிதாபமாக உயிரிழந்தார். அவர் வயிற்றில் இருந்த 9 மாத குழந்தையும் உயிரிழந்தது. விசாரணையில் 7 கிலோ மீற்றர் வெயிலில் நடந்து சென்றுள்ளமையே அவரது மரணத்திற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சம்பியன்ஸ் லீக்: இறுதிப் போட்டியில் இன்டர் மிலன்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரின் இறுதிப் போட்டிக்கு இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலன் தகுதி பெற்றுள்ளது.


சக இத்தாலிய சீரி ஏ கழகமான ஏ.சி மிலனுடனான முதலாவது சுற்று அரையிறுதிப் போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்த இன்டர் மிலன், சான் சிரோவில் நேற்று அதிகாலை நடைபெற்ற இரண்டாவது சுற்று அரையிறுதிப் போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் வென்று 3-0 என்ற கோல் கணக்கில் 10 ஆண்டுகளுக்குப் பின்னர் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இன்டர் மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை லொட்டரோ மார்ட்டினஸ் பெற்றிருந்தார்.



மருதமுனை பிறீமியர் லீக் தொடர்:

## சம்பியனான பிபோர்யு வொரியர்ஸ்







ஏ.எல்.எம். ஷினாஸ், றாசிக் நபாயிஸ்

மருதமுனை பிறீமியர் லீக் கிறிக்கெட் தொடரில் பிபோர்யு வொரியர்ஸ் சம்பியனானது.

மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற அணிக்கு 9 பேர் கொண்ட 7 ஓவர்கள் கொண்ட 10 அணிகள் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் சுனாமி யங்ஸ் அணியை வென்றே வொரியர்ஸ் சம்பியனானது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய யங்கர்ஸ் 7 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 54 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய வொரியர்ஸ் 4.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

சம்பியனான வொரியர்ஸ் சம்பியன் கிண்த்தையும் 40,000 ரூபாய் பணப்பரிசையும், இரண்டாமிடத்தைப் பெற்ற யங்ஸ் வெற்றிக் கிண்ணத்தையும் 20,000 ரூபாய் பெற்றுக் கொண்டது.



பாரதி தமிழ் மகா வித்தியாலய விளையாட்டுப் போட்டி:

## சம்பியனான திறமை இல்லம்

மெய்யன்

மத்திய மாகாண கண்டி பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியானது அண்மையில் நடைபெற்றபோது திறமை இல்லமானது சம்பியனானது.

## ஐ.பி.எல்: மும்பையை வென்ற லக்னோ



இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் (ஐ.பி.எல்), லக்னோவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மும்பை இந்தியன்ஸுடனான போட்டியில் லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மும்பை

லக்னோ: 177/3 (20 ஓவ. )

(துடுப்பாட்டம்: மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் ஆ.இ 89 (47), க்ருனால் பாண்டியா 49 (42) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜேஸன் பெஹ்ரென்டோர்ஃப் 2/30 [4], ஹிருத்திக் ஷொகின் 0/20 [3], ஆகாஷ் மட்வால் 0/30 [4], கமரொன் கிறீன் 0/16 [2], பியூஷ் சாவ்லா 1/26 [3])


மும்பை: 172/5 (20 ஓவ. )

(துடுப்பாட்டம்: இஷன் கிஷன் 59 (39), றோஹித் ஷர்மா 37 (25), டிம் டேவிட் ஆ.இ 32 (19) ஓட்டங்கள். பந்துவீச்சு: ரவி பிஷ்னோய் 2/26 [4], க்ருனால் பாண்டியா 0/27 [4], மொஷின் கான் 1/26 [3])

போட்டியின் நாயகன்: மார்க்கஸ் ஸ்டொய்னிஸ்

இந்நிலையில், ஹைதரபாத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரை சண்றைசர்ஸ் ஹைதரபாத் எதிர்கொள்ளவுள்ளது.

## பரிஸ் ஸா ஜெர்மைன் செல்லும் கேன்?



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் முன்களவீரரான ஹரி கேனைக் கைச்சாத்திடுவது குறித்து அவரின் பிரதிநிதிகளை பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் கால்பந்தாட்ட ஆலோசகர் லூயிஸ் கம்பொஸ் சந்தித்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 18 மே 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.